[6th March 1961

THE HON. SRI R. VENKATARAMAN: இதிலே, எந்த இடம் தொழிற்சாலை வைக்க தகுதியானது என்பது பற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள், அப்படிப் பலவிஷயங்களை அவர்கள் கவனிப்பார்கள்: நிலப்பரப்பு எவ்வளவு, சமவெளியாக இருக்குமா, தரைக்கு அடியில் நீர் மட்டம் எப்படி இருக்கிறது, போதிய தண்ணீர் கிடைக்குமா, சீதோஷ்ண நிலை எப்படியிருக்கிறது, ஈரம் எவ்வளவு இருக்கிறது என்றெல்லாம் பார்த்துத்தான் முடிவு செய்வார்கள்.

SRI A. A. RASHEED : Since the Government have got more valid reasons for establishing this Industry in this State, may I know whether they will consider the question of locating it at Arkonam or Katpadi which are more centrally situated and which have many facilities?

THE HON. SRI R. VENKATARAMAN : I wonder whether it is the expert who is going to decide on the location of the industry or Hon. Member Sri Rasheed.

Block Development Officers

***609 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY (on behalf of SRI N. R. THIAGARAJAN) :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எத்தனை ப்ளாக் டெவலப்மென்ட் ஆபீஸர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டது?,

(இ) எத்தனை பேர் இதில் ரெவன்யூ இலாகா அல்லாத வேறு இலாகாக்களைச் சேர்ந்தவர்கள்?

(உ) நேரடியாக பீ.டி.ஓ.-ஆக நியமிக்கப்பட்டவர்கள் யாருக்காவது பதவி உயர்வு அளிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Presumably the Honourable Member refers to the promotions made in the Rural Development and Local Administration department only. The Block Development Officers are recruited by transfer from different Departments or by promotion from the category of Social Education Organizers. In the Community Development Department itself, the Block Development Officers could be promoted only to Gazetted rank or the post of Assistant Development Commissioner (Training). Within the Department, there have been only 3 such promotions. In number of other cases Block Development Officers have been promoted in their parent Departments.

(*b*) The persons did not belong to the Revenue Department.

(*c*) No.

SRI M. A. B. ARUMUGHASAMY: ப்ளாக் டெவலெப்மெண்டு ஆபீசர்களை பதவியில் அமர்த்தும்போது அவர்களுடைய உழைப்பின் காலம், உழைப்பின் தரம், பிற்பட்ட வகுப்பா, இல்லையா என்பன போன்றவைகள் எல்லாம் மனதில் கொண்டு உத்தியோகம் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

6th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : சீனியாரிடி, மெரிட் இவைகளைக் கவனித்துத்தான் கொடுக்கப்படுகிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எஸ்.இ.ஓ.-க்களாக நியமிக்கும்போது அவர்கள் பி.டி.ஓ.-க்களாகப் பிரமோஷன் செய்யப்படலாம் என்ற விதி இருக்கிறது. எஸ்.இ.ஓ.-க்களாக ஆண்களும் நியமிக்கப்படுகிறார்கள், பெண்களும் நியமிக்கப்படுகிறார்கள். இப்படி நியமிக்கப்பட்டவர்களில் எத்தனை ஆண்கள் பி.டி.ஓ.-க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெண்கள் இன்னும் பி.டி.ஓ.-க்களாக வரவில்லை. ஆண்களில் 3 பேருக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னேன்.

SRI M. K. MARIAPPAN: இப்படி பிரமோஷன் கொடுத்திருப்பதில் ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிக் கேள்வி போட வேண்டும்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எஸ்.இ.ஓ.-க்களாக நியமிக்கப்படுபவர்கள் பி.டி.ஓ.-க்களாக நியமிக்கப்படலாம் என்ற விதி இருப்பது தெரியும். இருந்தாலும் ஒரு பெண்ணைக்கூட நியமிக்கவில்லை என்றால் பெண்களை நியமிக்கக் கூடாது என்று விதி ஏதாவது மாற்றப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெண்கள் யாரும் வரக் கூடாது என்று விதி எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இன்னும் வரவில்லை யாரும் என்றால் வருவதற்குரிய தகுதியை அவர்களில் யாரும் பெறவில்லை என்பதுதான் காரணம்.

Sugar

*610 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்திற்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட சர்க்கரையின் அளவு எவ்வளவு?

(இ) அது எங்கிருந்து சப்ளை செய்யப்படுகிறது?

(உ) இதுவரை வந்த சர்க்கரையின் அளவு எவ்வளவு?

(எ) பாக்கியிருந்தால், அது வராததின் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government of India were allotting at the rate of 10,000 tons per month up to May 1960. They increased it to 11,000 tons per month from June 1960.

(*b*) The allotment is made from factories in this State, from Andhra Pradesh and also from North Indian factories.